27430

1

# பூம்புகார் கலைக் கூடம்

19126



வெளியீடு:

செய்தி, மக்கள் தொடர்புத் துறை

தமிழ்நாடு அரசு




கரிகால் வளவன்



இளங்கோ அடிகள்



கண்ணகி
கோவலன்
மணக்கோலம்



# நுழை வாயில்

சுற்றுலாப் பெருமை கொண்டு விளங்கும் பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடம், தமிழக அரசின் முயற்சியால்—குறிப்பாக முதல்வர் கலைஞர் அவர்களின் அருந்தொண்டால் உருவாகியுள்ளது.

1973-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 17-ஆம் நாளில் முதலவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற இந்தக் கலைக்கூடத்தை நாள்தோறும் நூற்றுக் கணக் கான பொதுமக்கள் வந்து காண் கிறார்கள்—கண்டு மகிழ்கிறார்கள்.


வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் இங்கு நாள்தோறும் வருகின்ற பார்வையாளர்களில் சிலப்பதி காரக் கதையை நன்கு அறிந்தவர் களும் உண்டு. ஓரளவே தெரிந்து வைத்திருப்பவர்களும் உண்டு. அத ஞல் கலைக்கூடத்தில் உள்ள ஒவ் வொரு சுவர்ச் சிற்பத்தின் கீழும் அவற்றிற்குரிய சிலப்பதிகார வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. அந்த வரிகளுக்குரிய விளக்கங் களும்—அவற்றில் கூறப்படாமல் இருக்கும் அடுத்த காட்சியின் விளக்கமும் பார்வையாளர் களுக்கு எளிதில் புரியவேண்டும் என்பதற்காக—இந்த விளக்கக் கையேடு உருவாகியுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் இந்தக் கையேடு பயணிகளுக்குக் குறைந்த விலையில் தரப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறோம்.

செய்தி—மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

# பூம்புகார் கலைக்கூடம்

## விளக்கக் கையேடு



நமது அன்னைத் தமிழகம், பழங்காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாக விளங்கி வந்தது. சேர நாட்டை ஆட்சி செய்தவர்கள் சேரர் என்றும், சோழ நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் சோழர் என்றும், பாண்டிய நாட்டை ஆட்சி செய்தவர்கள் பாண்டியர் என்றும் வழங்கப் பெற்றார்கள்.

மாட மதுரை பாண்டிய மன்னர்களின் தலைநகராகவும், வஞ்சி மூதூர் சேர மன்னர்களின் தலைநகராகவும், பூம்புகார் என்று சொல்லப்படும் காவிரிப்பூம்பட்டினம் சோழ மன்னர்களின் தலைநகராகவும் விளங்கின.

பொதுவாக, ஆறு, கடலுடன் கலக்கும் முகத்துவாரத்திற்குப் புகார் என்பது பெயர்; அதன்படி, காவிரியாறு கடலுடன் கலக்கும் இடமும் புகார் என்றே வழங்கப் பெற்றது. பின்னர், இந்தப் புகார், பொலிவின் காரணமாகவும், சிறப்பின் காரணமாகவும் பூம்புகார் என்று அழைக்கப் பெற்றது.

பிற்காலத்தில், பூம்புகார் என்னும் பெயர் மாறி, காவிரி புகும் பட்டினம் என்றாகி, அதுவும் நாளடைவில் காவிரிப் பூம்பட்டினம், காவிரிப்பட்டினம், காவேரிப்பட்டினம் என்று பலவாறாக வழங்கப் பெறலாயிற்று.

இன்றையத் தமிழக அரசு, பழந்தமிழ்ப் பெயர்களையும், போற்றத்தக்க பழந் தமிழ்ப் பண்பாட்டையும் விடாமல் வலியுறுத்தி வருவதால், மீண்டும் 'பூம்புகார்' மலர்ந்து, தமிழர் மனத்தில் மகிழ்ச்சியையும், எழுச்சியையும் உருவாக்கி வருகிறது;



காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்புக்களைச் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களுள் சில பாடல்களும், பத்துப் பாட்டில் பொருநர் ஆற்றுப்படையும், ஐம் பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியனவும் தெளிவாக விளக்குகின்றன.

காவிரிப்பூம்பட்டினம் முப்பெரும் பிரிவுகளாக விளங்கியது.

காவிரிப்பூம்பட்டினத்தில் கடற்கரை யோரமாக அமைந்த பகுதி மருவூர்ப்பாக் கம் ; நகராக அமைந்த பகுதி பட்டினப் பாக்கம். இவ்விரு பாக்கங்களுக்கும் இடையே அமைந்த பகுதி நாளங்காடி.

மருவூர்ப்பாக்கத்தில், ஒளிநிலா முற் றங்களும், சிறப்பு மிக்க பலவகை அணி களால் அழகு செய்யப்பட்ட அறைகளும், மான் விழி போலமைந்த சாளரங்களும் கொண்ட மாளிகைகள் மிகுதியாக அமைந் திருந்தன. பெரிய பண்டகசாலைகள் இருந்தன. . காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் யவனர் மாளிகைகள் விளங்கின. கடல் வாணிகத்தில் பொருள் குவிக்கத் துணிந்த பிறநாட்டு வணிகர்களும் அந்தக் கடற்கரையோரமாக வாழ்ந்தார்கள். மருவூர்ப்பாக்கத்துத் துறைமுகத்தில் பல் வேறு நாட்டுக் கப்பல்களும் வந்துதங்கின. அலைகளினால் அலைவுற்று நிற்கும் நாவாய் கள் பலவும் அங்கு நிறைந்திருந்தன.

சாந்து, மணப்பொடி, குளிர்மணச் சந் தனம், பல்வகை மலர்கள், செந்தேன், பச்சிலை, கற்பூரம், அகில் முதலியவற்றை விற்போர் நகர வீதிகளில் திரிந்தனர்.

நகரின் தெரு ஒன்றில், பட்டு நூலா லும், பருத்தி நூலாலும், எலி மயிராலும் பல்வகை ஆடைகள் நெய்யும் தொழில் நுட்பம் வாய்ந்த நெசவாளர் இருக்கை களும் விளங்கின.

மாசறு முத்தும், பல்வகை மணிகளும், பொன்னும் இவ்வளவின என வரையறுத்துச் சொல்ல முடியாத அளவில் குவிந்து கிடக்கும் அகன்ற தெருக்கள் — நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கி, தோரை, இராகி, எள், கொள், பயறு, உளுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, மூங்கில், நெல், காராமணி ஆகிய பதினெண்வகைத் தானியங்களும் விற்கப்பட்ட தெருக்கள் — அப்ப வாணிகர், கள் விற்போர், மீன் விற்போர், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கற்பூரம், தக்கோலம் ஆகிய ஐவகை மணப்பொருள்கள் விற்போர் வாழ்விடங்கள் கொண்ட தெருக்கள் ஆகியவற்றோடு, கள் விற்கும் மகளிர், மீன் விற்கும் பரதவர், ஆடுகள் விற்போர் ஆகியோர் நிறைந்த புலால் கடைகளும் நகரில் இருந்தன.

கருமார், தச்சர், ஓவியர், சிற்ப வல்லுநர், தட்டார், தையல் தொழிலாளர், கம்மியர், செம்மார் முதலிய பல்வகைத் தொழிலாளர்களும் நகரின் ஒருபுறத்தே இருந்தனர்.

இன்னொரு தெருவில், ஏழிசைப் பண்ணும் திறனும் அறிந்து பாடும் பாணர்களும், இசைவாணர்களும் வாழ்ந்தனர்.

அடுத்து, பட்டினப்பாக்கம்.

பட்டினப்பாக்கத்தில் அரசனுடைய அரண்மனை இருந்தது. சோழன் கரிகாலன் காலத்தில்தான் காவிரிப்பூம்பட்டினம் சிறப்போடு விளங்கியது. அவன், வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, வளர்பேரிமயத்தில் புலிக்கொடியை நாட்டிவிட்டுத் திரும்பினான். அவன் மீண்டு வரும் வழியில், வச்சிர நாட்டு மன்னன் முத்துப் பந்தர் ஒன்றையும், மகத அரசன் தோரண வாயில் ஒன்றையும் திறையாகவும் பரிசாகவும் கொடுத்தனர்.





முத்துப்பந்தரும், தோரண வாயிலும் பொன்னும் மணியும் இழைத்த அரிய வேலைப்பாடுகள் உடையவை. கரிகாலன் இவற்றையெல்லாம் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் கொணர்ந்து, ஒன்றுசேர்த்துக் கண் கவரும் கொலுமண்டபம் ஒன்றை அமைத்தான். இந்த மண்டபம் புலவர்கள் பாடும் சிறப்பைப் பெற்றது. இதற்குப் பட்டிமண்டபம் என்று பெயர்.

காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியது. அங்கு இறக்குமதிப் பொருள்களிலும், ஏற்றுமதிப் பொருள்களிலும் புலி இலச்சினை பொறிக்கப்பட்டது.

காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் குதிரைகள் வந்து இறங்கினவாம். யவன, சோண வணிகர்கள் தமிழ்நாட்டுப் பொருள்களை வாங்கிச் செல்லக் கப்பல்களுடன் வந்திருப்பார்களாம். தமிழக மிளகு, அகில், துகில், முத்து, மணி, பவளம் முதலியன பிறநாடுகளுக்கு மிகுதியாக அனுப்பப்பட்டன. இத்துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது.

பட்டினப்பாக்கத்தில் ஐவகை மன்றங்கள் இருந்தன. அவை, வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச் சதுக்கம், பாவை மன்றம் எனும் பெயர் பெற்றிருந்தன.

பொருளைக் களவு செய்வோரை வெளிப்படுத்தி அவமானப்படுத்துவது வெள்ளிடை மன்றம் ;

'இலஞ்சி மன்றம்' என்பது ஒரு பொய்கை. கூன், குருடு, ஊமை, செவிடு, தொழுநோயர் ஆகியோர் அப்பொய்கையில் மூழ்கி வலம் வந்தால் குறை நீங்கி நலம் பெறுவராம்.

நெடுங்கல் மன்றத்தில் ஒளிவீசும் நெடிய கற்கள் நடப்பட்டிருக்குமாம். வஞ்சகர்களால் மருந்து வைக்கப்பட்டுப் பித்

தம் கொண்டோர்—நஞ்சுண்டு துன்புறுவோர் ; நச்சரவம் தீண்டியுள்ளோர், ஆகியோரெல்லாம் அந்த ஒள்ளிய—நெடிய கற்களைச் சுற்றி வந்து நலம் பெறுவராம்.

அரசனின் செங்கோல் தவறினாலும், அறங்கூறவையத்தார் நடுவுநிலை பிறழினும், அதனை நாவாற் கூறாமல், கண்குறிப்பில் காட்டும் பாவையைக் கொண்டு உள்ளதாம் பாவை மன்றம்.

இங்ஙனம், ஐவகை மன்றங்களையும் கொண்ட காவிரிப்பூம்பட்டினம், சமணர்கள், பௌத்தர்கள், சைவர்கள், வைணவர்கள், ஆகிய பல்வேறு சமயத்தினரும் வாழ்ந்த ஓர் ஒருமைப்பாட்டுத் தலமாக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை சிறப்பும் அமையப் பெற்ற பூம்புகார்; காலத்தின் கோலத்தால் — கடற்கோளுக்கு இரையாகி, கபாடபுரம், லெமூரியாக் கண்டம் போன்ற மறைந்த நகரங்களின் பட்டியலிலே இடம்பெற்றது.

மறைந்த நகரங்களை மீண்டும் காண வேண்டும் என்ற ஆர்வம் எழுவது இயல்பு. மேலைநாடுகளில் கடல் கொண்ட நாடுகள் பலவற்றை அகழ்வாராய்ச்சி செய்து தேடிடவும், மீண்டும் அவற்றை உருவாக்கிடவும், பெரும் முயற்சி செய்துவருகிறார்கள். தமிழகத்திலும், 'எவ்வளவு பணம் செலவானாலும் சரி, கடலுக்குள் சென்று அகழ்வாராய்ச்சி நடத்த வேண்டும்' என்று சில அறிஞர் பெருமக்கள் கருத்துத் தெரிவித்தார்கள். நமது நாட்டுப் பொருளாதாரம் அந்த அளவுக்கு இடம் கொடுக்கவில்லை. என்றாலும், அந்தக் காலத்துச் சூழ்நிலைகளையாவது உருவாக்கலாம் என்ற எண்ணத்துடன்தான், மறைந்துவிட்ட பூம்புகார் நகரை மீண்டும் அதே வனப்புடன் காணவேண்டும்—கண்ணகி வாழ்ந்த ஊரில் அவளுக்கு நிலையான நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும், என்று மாண்புமிகு





தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கருதினார்கள்.

ஏற்கெனவே கண்ணகி வாழ்க்கை வரலாற்றைக் கவிதை நடைநாடகமாக்கிப் பூம்புகார் என்ற தலைப்பில் திரைப்படமாகவும் ஆக்கிய டாக்டர் கலைஞர் அவர்கள், சிலப்பதிகாரக் காட்சிகளைச் சிற்பங்களாக வடித்து, அவற்றை ஒரு மண்டபத்திலே அமைத்து, சிலப்பதிகாரக் கதையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைக்க வேண்டும் என்றும், அதற்காகச் சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்றை நிறுவ வேண்டும் என்றும் கருதினார்கள். அவர்களது பெரு முயற்சியின் விளைவாக மலர்ந்திருப்பதுதான் பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடம்.

சேர மன்னன் செங்குட்டுவன் அன்று கண்ணகிக்குக் கற்கோயில் எடுத்தான். அவனது இளவல் இளங்கோ சொற்கோயில் எடுத்தான். இன்று சொற்கோயிலையும் கற்கோயிலையும் கலைஞரே எடுத்திருக்கும் பணி, எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

இந்தக் கலைக்கூடம் அமைந்துள்ள கட்டடம் எழுநிலை மாடம் என வழங்கப் பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில்தான் இந்தக் கட்டடம் உருவாக்கப் பெற்றிருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற கட்டட அமைப்புக் கிடையவே கிடையாது.

பூம்புகாரில் கடற்கரைக்கு அருகில் ஏறக்குறைய 2.16 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் 5,100 ச.அடி அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது சிலப்பதிகாரக் கலைக்கூடம். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது 28—5—1968-ல் இந்தக் கலைக்கூடத்துக்கு அடிக்கல் நாட்டினார்கள். என்றாலும், 1970-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில்தான் பணிதுவக்கப்

பெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 17-4-1973 அன்று இந்தச் சிலப்பதிகாரக் கலைக்கூடத்தைத் திறந்து வைத்தார்கள்.


ஏறக்குறைய 4 இலட்ச ரூபாய் செலவில் உருவாகியுள்ள இந்தக் கலைக்கூடத்தில், இடம் பெற்றுள்ள சிற்பங்கள் யாவும் மாமல்லபுரத்திலுள்ள அரசினர் சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்தில் உருவானவை யாகும்.

ஏழு மாடங்கள் கொண்டது இந்தக் கட்டடம். முதல் மாடம் 12 அடி உயரமும், அதன் மேலுள்ள ஒவ்வொரு மாடமும் 5 அடி உயரமும், ஏழாவது மாடத்துக்கு மேலுள்ள கலசப் பகுதி 8 அடி உயரமும் கொண்டுள்ளன. மொத்த உயரம் 50 அடிக்கு மேல் உள்ளது.

மாடத்திற்கு முன்னே மிகப் பெரிய தோரண வாயில் கம்பீரமாகக் காட்சி தருகிறது. இதன் உயரம் 22.5 அடி. சுருளி மலையில் சிதைந்த நிலையில் காணப்படும் மங்கல தேவி கோயிலில் காணப்பட்ட தோரண வாயிலை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப் பெற்றது இது.

தமிழர் இலக்கியத்தில் தாமரை மிக உன்னதமான இடம் பெற்றிருக்கிறது. ஆலயங்களிலும் கலைக்கூடங்களிலும் தாமரைச் சிற்பங்களை வடிக்கத் தவறுவதில்லை தமிழ் மக்கள். இந்தக் கலைக்கூடத்திலும் மேல் தளத்தின் உட்புறத்தில் தாமரை மலர் வட்டங்கள் 20 உருவாக்கப்பட்டுள்ளன.

கலைக்கூடத்தின் உள்ளே-திறந்த வெளிப் பகுதி ஒன்றில் சிலம்பு வடிவத்திலே சிறு குளம் ஒன்று உருவாக்கப் பெற்றுள்ளது. அதன் அருகே 9 அடி உயரத்தில் மாதவி சிலை வைக்கப் பெற்றுள்ளது. இதன் எடை 2.5 டன் ஆகும். அந்தக் காலத்தில் மாதவி அணிந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்ற அணிகள் எல்லாம் இந்த மாதவி சிலையில் இடம் பெற்றிருக்கின்றன.





அக்காலத்துப் பூம்புகாரின் அணிமிகு காட்சி இக்காலத்திலும் நிறைந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக வும்—பூம்புகாருக்குள் நுழையும்போது பண்டை நாள் வரலாறு நமக்குத் திரும்பக் காட்சியாகத் தெரியவேண்டும் என்று அவா வின் காரணமாகவும், இலஞ்சி மன்றம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம் பௌத்தப் பள்ளி, திருமால் கோட்டம், முருகுக் கோட்டம், அருகன் கோட்டம் ஆகியவை இங்கே இடம் பெறுகின்றன. சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழா வின்போது இவற்றின் கால்கோள் விழாக் களும் நடைபெற்றன.


சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகக் கலைக்கூடத்தின் கீழ்த்திசையில் அறிஞர் அண்ணு விருந்தினர் மாளிகை ஒன்றும் உரு வாகி வருகின்றது.

மொத்தத்தில்............

பூம்புகார், உல்லாசப் பயணிகளின் உள் ளங்களைக் கொள்ளை கொள்ளும் இடமாக மாறியுள்ளது. தமிழ்நாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டார் அனைவரும் மாமல்லபுரத் தோடு நின்றுவிடாமல் பூம்புகாரையும் நாடி வருகிறுர்கள். வெளிநாட்டார் என்ன, நமது நாட்டவர்களே, நாள்தோறும் ஆயிரக் கணக்கில் வருகை புரிகின்ற அள வுக்கு ஒரு சுற்றுலாத் தலமாகப் பூம்புகார் மாறி வருகிறது. நமது பண்டைய நாள் வரலாறு மீண்டும் உருவாக வழி வகுத்த முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தமிழு லகம் நன்றி சொல்லி வருகிறது.

சிலப்பதிகாரக் கலைக்கூடத்தில் உள்ள 49 சுவர்ச் சிற்பங்களும் பாவங்கள் ததும்ப அமைந்துள்ளன. இந்தச் சிற்பங்கள் காண வருவோருடன் உரையாடுவதுபோல் விளங்குகின்றன. சிற்பங்கள் சொல்லும் சிலப்பதிகாரக் கதையைத் தொடர்வோம்.

# 1. சிலம்பும் ஏடும்.



சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து வந்த கோவலன் கண்ணகி இருவரின் வாழ்விலும் வினைவந்து எய்துவதற்குச் சிலம்பு காரண மாக இருந்தது. அதனால் சிலப்பதிகாரம் என்ற பெயரால் ஒரு பாட்டுடைச் செய்யுளை இயற்றுவோம் என்று சீத்தலைச் சாத்தனாரிடம் இளங்கோவடிகள் சொல்கிறார்.

இந்த வரிகள் சிலப்பதிகாரக் காவியத்தின் பதிகச் செய்யுளில் இடம் பெற்றிருக்கின்றன.


## 2. சிலம்பில் இளங்கோ.



உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்.

புகழ்மிக்க இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைச் செய்யுளாக வடித்தார். மதுரைக் கூல வாணிகன் சாத்தன் என்னும் புலவர் அதனைக் கேட்டார்.

## 3. பூர்புகார்—மருவூர்ப்பாக்கம்.




சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கம்.

பூம்புகார் மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம், நாளங்காடி என முப்பெரும் பிரிவாக அமைந்திருந்தது.

சிறிய சிறிய கைத்தொழில் செய்கின்றவர்கள், பிறரிடம் அலுவல் செய்யும் ஏவலர்கள் ஆகியோர் சேர்ந்து வாழும் இடங்களெல்லாம் அமைந்து விளங்கிய பகுதி மருவூர்ப்பாக்கம் ஆகும். அது குற்றமின்றிச் செம்மையாகத் திகழ்ந்தது.

# 4. பூம்புகார்— பட்டினப்பாக்கம்.



பீடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பின் பட்டினப் பாக்கம்.

பெருமை பொருந்திய, சிறப்பு மிகுந்த பெரியோர் நிறைந்திருக்கும் பூம்புகார்ப் பட்டினப்பாக்கம் புகழ் படைத்த பகுதியாகத் திகழ்ந்தது.

# 5. பூர்புகார்—நாளங்காடி.




பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து
நாள்மகிழ் இருக்கை நாளங் காடி.

பொதிய மலையிலிருந்து புறப்பட்ட தென்றல் நறுமணம் நிறைந்த பூங்காவில் விளையாட விரும்பி, நாள் முழுவதும் மகிழ்ச்சியின் இருப்பிடமாக விளங்கிய நாளங்காடியுள் நுழைந்து, புகார் நகரின் தெருக்களில் புகுந்து வீசியது.

பகற்பொழுதில் வியாபாரம் செய்யும் கடைகள் நாள் அங்காடிகள் என்றும், இரவுப் பொழுதில் வியாபாரம் செய்யும் கடைகள் அல் அங்காடிகள் என்றும் வழங்கப்பெற்றன.

# 6. கண்ணகி - கோவலன் திருமண அறிவிப்பு.



யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்.

மாசாத்து வாணிகன் மகன் கோவலன். மாநாய்கன் பெற்ற குலக்கொடி கண்ணகி.

கோவலன்-கண்ணகி இருவரையும் மண வாழ்வில் ஈடுபடச் செய்வதற்கு இருவரின் பெற்றோரும் முடிவெடுத்தார்கள். அதனால், யானை யின் பிடரியிலே அழகிய அணிகள் அணிந்த மகளிரை அமரவைத்துப் புகார் நகர் முழுவதும் மணவிழாச் சேதியை அறிவிக்கச் செய்தார்கள்.

# 7. மணவிழா வாழ்த்து.




போதொடு விரிகூந்தற் பொலன்நறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
'தீதறுக' என ஏத்திச் சின்மலர் கொடுதூவி

கண்ணகி, கோவலன் திருமணம் நடை பெறுகிறது. மலரணிந்த, அடர்ந்த, கூந்தலுடைய மகளிர் பலர், பொற்கொடிகள் போல் அசைந்து வருகிறார்கள். கண்ணகிக்கு வாழ்த்துக் கூறு கிறார்கள்.

''கணவனைப் பிரியாமல், பிணைத்துள்ள கையின் இணைப்பு ஒரு சிறிதும் நெகிழ்ந்து விடாமல்-தீமைகள் யாவும் நீங்கி-இன்பம் உறுக'' என்று அந்தப் பெண்கள் வாழ்த்துவதோடு கண்ணகியின் மீது மலர்களையும் தூவுகின்றார்கள்.

# 8. நிலா முற்றத்தில் கண்ணகி–கோவலன்.



கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும்
மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்துழி.

கண்ணகியும் கோவலனும் இல்லற வாழ்வில் ஈடுபடுகின்றனர். குவளை மலர் போன்ற கண்களை யுடைய கண்ணகியும் அவளது கணவனும், தமது ஏழடுக்கு மாடிகளின் இடைப்பகுதியான நான்காம் மாடியில், தேவதச்சன் மயனே உருவாக்கினனோ என்று சொல்லும் வகையில் அமைந்துள்ள, மணிகளால் ஆகிய கால்களையுடைய கட்டிலின் மீது இன்பமுடன் வீற்றிருந்தனர்.

# 9. மாதவி அரங்கேற்றத்திற்கு மாண்புடைய தலைக்கோல்.




வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணிய பின்னர் மாலை அணிந்து
அரசுஉவாத் தடக்கையால் பரசினர் கொண்டு.

புகழ்மிக்க பகை மன்னருடன் போரிடும் போது அவர்கள் புறமுதுகிட்டு ஓட, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட வெண்கொற்றக் குடையின் காம்பினைச் சிதைவின்றி நன்ருகப் பார்த்தெடுத்து, அதன் ஒவ்வொரு கணுவிலும் தூய்மை செய்த நவமணிகளைக் கட்டுவார்கள்.

நாட்டினை ஆளும் மன்னனின் வெண்குடை விளங்கும் அரண்மனையில் இந்திரன் மகனுன சயந்தனுக இக்கோல் விளங்குக என அதற்கு வழிபாடுகளும் வணக்கமும் செய்து போற்றுவார்கள். அதுதான் தலைக்கோல் என்பது.

# 10. தலைக்கோல் சிறப்பு.




தேர்வலம் செய்து கவிகைக் கொடுப்ப
ஊர்வலம் செய்து புகுந்து முன்வைத்து.

பொற்குடங்களிலே முகந்து வந்த நன்னீரில் அந்தத் தலைக்கோலை நீராட்டி, நறுமண மலர் மாலைகளைச் சூட்டிப் பட்டத்து யானையின் பெருங்கையிலே வாழ்த்தொலிகளுடன் தருவார்கள். யானையையும் உடன் அழைத்துக் கொண்டு வீதிவலம் வருவார்கள்.

இந்த உலாவிலே மூவகை முரசுகள் முழங்க, பல்வேறு இன்னிசைக் கருவிகள் இயங்க, அரசனும் அவனது ஐம்பெருங் குழுவும் யானையுடன் தொடர்ந்துவர, யானை தேர் வீதியைச் சுற்றி வலம் வந்து, தன் கையிலிருந்த தலைக்கோலை அரங்கத்தினருகே நின்ற கவிஞனின் கையிலே கொடுத்தது. அந்தத் தலைக்கோலை மாதவியின் ஆடல் அரங்கேறவிருக்கும் நாடக அரங்கிலே எதிர் முகமாக வைத்தான் அந்தக் கவிஞன்.

# 11. மாதவி நாட்டிய அரங்கேற்றம்.



மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்.

மாதவியின் நடனம் அரங்கேறிய அரங்கம், சிற்பக்கலை நூலோர் சொல்லிய நடன அரங்கத்தின் அமைப்பியல்புகளிலிருந்து சிறிதும் பிசகாத வகையில், பலவிதச் சிறப்புகளுடன் திகழ்ந்தது.

அரங்கத்தில் முத்துமாலைகள் தொங்கவிடப் பட்டிருந்தன; ஒவ்வொரு பகுதியும் புதுமை கொழிக்கும் வண்ணம்—கைவினையின் நயமிக்க தொழில் திறமையுடன் காணப்பட்டது.


# 12. நாட்டியச் சிறப்பு.



பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டினள்...

மாதவி நாட்டியக் கலையில் வல்லவள். நாட்டியக் கலைக்குரிய இலக்கணம் யாவும் கற்றறிந்தவள். நாட்டிய நன்னூற்களில் உள்ள இலக்கணத்தைக் கடைப்பிடித்துத் திறமாக நாட்டியம் ஆடிக் காட்டினாள்; பொன்னின் இயல்புகள் அமைந்த ஒரு பூங்கொடியே அரங்கத்தில் ஏறி நின்று நாட்டியம் ஆடியது போன்று இருந்தது அந்தக் காட்சி.

# 13. மாதவிக்கு மன்னன் தந்த பரிசு.



தலைக்கோல் எய்தித் தலைஅரங் கேறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள்.

மன்னன் கரிகால் வளவன் கொடுத்த பச்சை மாலையையும் 'தலைக்கோலி' என்ற சிறப்புப் பெயரையும் மாதவி பெற்றுள். கலையரங்கிலே ஏறி ஆடிக்காட்டி, நாடக மகளிர்க்குத் தலைவரிசை என நூல்கள் விதித்துள்ள முறையின்படி 'ஒரு நாளுக்கு ஆயிரத்து எட்டுக் கழஞ்சுப் பொன்னை, முறையாகப் பெறுபவள்' என்ற நிலைமையையும் பெற்றுள்.

# 14. கோவலன் மாலை வாங்குதல்.



மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு.

'மன்னன் கொடுத்த மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் கொடுத்து வாங்குபவன் மாதவிக்குக் கணவனாவான்' என்று கூறுகிறாள் மாதவியின் தாய் சித்திராபதி.

அந்த மாலையை ஒரு கூனியிடம் கொடுத்து, நகரத்து இளைஞர்கள் பலரும் செல்லும் தெருவில் விலை கூறுமாறு பணிக்கிறாள். அவளும் அவ்வாறே செய்கிறாள். கோவலன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப்பொன் கொடுத்து அந்த மாலையை விலைக்கு வாங்குகிறான். பிறகு கூனியோடு மாதவியின் இல்லம் நோக்கிப் புறப்படுகிறான்.


# 15. மாதவியின் மனை புகுதல்.



அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பின னாயினன்.

மாதவியின் வீட்டுக்கு வந்த கோவலன் மாதவி யுடன் தழுவிக் கூடி மகிழ்ச்சி பெற்றான். அவளது தழுவுதலைப் பெற்ற போதே அவள்மீது அவனுக்கு ஒருவித மயக்கம் ஏற்பட்டது. அவளை விட்டுப் பிரிவதென்பதையே அறியாத பெருவிருப்பம் கொள் கிறான்.


# 16. நிலா முற்றத்தில் கோவலன்-மாதவி.



கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
ஆர்வ நெஞ்சமொடு

மாலைப் பொழுது வருகிறது. தலைவன் தலைவியரின் உள்ளங்களுக்கு உவகை தருகிறது. கோவலனும் மாதவியும் நிலா முற்றத்தில் அமர்ந்திருக்கிறார்கள். மாதவி; தன் காதலன் கோவலனுக்கு ஊடலும் கூடலும் மாறி மாறித் தந்து, அவனுக்கு இன்பத்தை வாரி வாரி வழங்குகிருள். அவள், நெஞ்சத்தில் ஆர்வம் கொண்டு விளங்குகிருள்.

# 17. கவலைமிகு கண்ணகி.




மைஇருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும்.

மாலைப்பொழுது தலைவனைப் பிரிந்த தலைவிக்குத்துன்பம் தருவது இயல்பு. அத்துன்பம் தாங்காது, தலைவனைப் பிரிந்த தலைவியர் ஊது உலைபோன்று மூச்சு விட்டு நெஞ்சம் வெதும்புவார்கள்.

கோவலனைப் பிரிந்த கண்ணகியும் பிரிவுத் துயரத்துக்கு ஆளானாள். கணவனைப் பிரிந்த அவள் தனது மேனியை அழகு செய்துகொள்ள மறந்தாள்.

அடர்ந்த மை போன்ற தனது கூந்தலில் வாசம் மிகுந்த நெய் தடவவில்லை; கூந்தலில் அணிய வேண்டிய அணிகலன்களை அணியவில்லை; தனித்திருந்து, கவலை கொண்ட நெஞ்சுடன் நிலாக்காலத்தை எண்ணி, வருந்திப் புலம்பினாள்.

## 18. மணிமேகலைக்குப் பெயரிடல்.




அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று

கோவலனுக்கு—மாதவியிடம் பிறந்த பெண் குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா நடைபெற்றது. ''என்ன பெயர் சூட்டலாம் ?'' என்று வயது முதிர்ந்த கணிகையர் கேட்டார்கள். அப்போது கோவலன்,

''ஒரு சமயம் கடற்பயணம் செய்து கொண்டிருந்த என் முன்னோர் ஒருவரின் கலம் உடைந்து, அவர் கடலிலே விழுந்து தவித்தார். அப்போது மணிமேகலா தெய்வம் அவரைக் காத்தது. ஆகவே அதன் பெயரை என் செல்விக்குச் சூட்ட வேண்டும்'' என்று தெரிவித்தான்.

உடனே மேகலை என்னும் நகையணிந்த ஆயிரம் கணிகையர் கூடி நின்று, 'மணிமேகலை' என்று பெயரிட்டு வாழ்த்தினார்கள். அந்நந்நாளில் அனைவர்க்கும் பொன்னை வாரிவாரி மாரி போலப் பொழிந்தான்.

## 19. கருணை மறவன்.




பிடர்த்தலை இருந்து பெருஞ்சின் பிறழாக்
கடக்களிறு அடக்கிய கருணை மறவன்

கோவலனின் வாழ்க்கையில் நடைபெற்ற வீரமும் ஈரமும் பின்னிய நிகழ்ச்சி இது.

மணிமேகலையின் பெயர் சூட்டு விழாவில் தானம் பெறுவதற்கு ஒரு முதிய மறையவன் தண்டூன்றி வந்தான். அப்போது, பாகனுக்கு அடங்காது வெறி பிடித்து ஓடி வந்துகொண்டிருந்த ஒரு யானை, அந்த மறையவனைத் தனது துதிக் கையினால் பற்றியது. அதைக் கண்ட கோவலன் கொதித்தெழுந்தான், யானையின் பிடரியிலே ஏறி யமர்ந்து அதன் செருக்கினையடக்கி, அந்த மறைய வனையும் காத்துக் கருணைமிகு வீரன் எனத் திகழ்ந்தான்.


# 20. கோவலன் திறம்.



நல்வழிப் படுத்த செல்லாச் செல்வன்

காவிரிப்பூம்பட்டினத்தில் வசித்து வந்த பார்ப்பனப் பெண் ஒருத்தி, ஆராய்ந்து பார்க்காது, தான் வளர்ந்து வந்த கீரிப்பிள்ளை தன் குழந்தையைக் கொன்று விட்டது என்று கருதி, கீரியைக் கொன்று விடுகிறாள். பிறகு தனது தவற்றை உணர்கிறாள். அவளது கணவன், தன் மனைவியின் செயலால் மனம் நொந்து, சினந்து வெளியேறுகிறான். அவளும் பின்தொடர்கிறாள். அப் போது, அவளிடம் ஓர் ஏட்டைக் கொடுத்து, ''இதனைக் கடமை யுணர்ந்த மக்களிடம் கொடுப்பாயாக'' என்று சொல்லிச் செல் கிறான். அந்த ஏட்டை வைத்துக் கொண்டு, அந்தப் பெண் அலைகிறாள். அந்தப் பெண்ணை அழைத்து, அவளிடமிருந்த ஏட்டை வாங்கிப் பார்த்து, தான தருமங்கள் செய்து அவளது தீச்செயல் வினைவை நீக்கி, நற்பயன் கிடைக்குமாறு செய்கிறான் கோவலன். அவளது கணவனையும் தேடிக் கண்டு பிடித்துச் சேர்த்து வைக்கிறான். அவர்களுக்கு நிறைந்த செல்வத்தைத் தந்து அவர்களை நல்வழிப்படுத்தித் தொலையாத செல்வம் உடையவனாகத் திகழ்கிறான்.


## 21. இந்திர விழா அறிவிப்பு.



மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி

விண்ணவர் தலைவனான இந்திரனுக்கு விழா எடுத்தார்கள், புகார் நகர மக்கள். மண்ணிலே உள்ள மக்கள் கண்டும், கேட்டும், மருட்சியடையும் வகையிலும், விண்ணவர்கள் வியப்புக் கொள்ளும் வகையிலும் விண்ணவர் தலைவன் இந்திரனின் திருவுருவுக்குத் திருமஞ்சன நீராட்டினார்கள் மக்கள்.


## 22. கடற்கரையை நோக்கிக் கோவலன்–மாதவி.



வான வண்கையன் அத்திரி ஏற
மானமர் நோக்கியும் வையம் ஏறி

இந்திர விழாவின் பொருட்டு மக்கள் கடலாடுதற்கு விரைந்து சென்று கொண்டிருந்தார்கள். அதனைப் பார்த்த மாதவி, தானும் சென்று காண விரும்பினுள். காதலன் கோவலனிடம் கூறினுள்; அவனும் அதற்கு இணங்கினுன். மாதவி அணிகலன்கள் எல்லாம் அணிந்து கொண்டாள். மழை போல் அள்ளி வழங்கும் வள்ளல் கோவலன், ஒரு கோவேறு கழுதையின் மேலே ஏறிக் கொள்ள, மான் போன்ற மாதவி ஒரு மூடு வண்டியிலே ஏறிக் கொள்ள, இருவரும் புறப்பட்டனர்.

# 23. கோவலன் யாழ் மீட்டல்.




கோவலன் கையாழ் நீட்ட—அவனும்
காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்

கடற்கரைக் கருகில், ஓர் உள்ளிடத்தில் புன்னை மரத்தின் நிழலில், தந்தக் கால் கட்டிலில் அமர்ந்திருந்தார்கள் கோவலனும் மாதவியும். மாதவியின் கையிலிருந்த யாழினைக் கோவலன் வாங்கினான். காவிரியை எண்ணிக் கடற்கானல் வரிப் பாணியும்பாடத் தொடங்கினான்.

''காவிரியே! உனது தலைவனான கரிகால் மன்னன் வடபுலம் சென்று வென்று கங்கையை மணந்து கொண்டான். அப்போதும் நீ கோபம் கொள்ளாமல் உன் பாதையில் ஒழுங்காகச் செல்கிறாய். நீ வாழ்க'' என்று பாடி, கரிகால் மன்னனைச் சிறப்பித்தான்.

தன்னைவிட்டு வேறொரு பெண்ணிடம் கோவலன் மயக்கம் கொண்டிருக்கிறான் என்று சந்தேகம் கொண்டு விட்டாள் மாதவி.

# 24. மாதவி பாடல்.




கலவியான் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ்வாங்கித்
தானுமோர் குறிப்பினள்போல் கானல்வரிப் பாடல்பாணி

சந்தேகம் கொண்ட மாதவி, கோவலனிட மிருந்து யாழை வாங்கினுள். தலைவிக்குரிய ஊடுதலில் இறங்கினுள். தானும் வேருெரு தலைவனைப் பாடுவதுபோல் கானல்வரிப் பாடல் பாடினுள்.

மாதவியின் ஊடல், கோவலனின் உள்ளத்தில் ஐயத்தை உருவாக்கிவிட்டது.

# 25. கோவலன் பிரிவு.




உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை
நெகிழ்ந்தனனாய்ப் பொழுதீங்கு கழிந்தது ஆகலின்...

மாதவி வேறொருவனை நினைத்துப் பாடினாள் என்று ஐயுற்றதும் கோவலன் மனம் கொதித்தான். 'மாதவி வஞ்சனை நிறைந்தவள்; மாயம் மிகுந்தவள்' என்றெல்லாம் நினைத்தான். முழு நிலவு முகம் கொண்ட மாதவியுடன் கைகோத்து இணைந்து வாழ்ந்த தனது கைப்பிணைப்பை நெகிழ விட்டான்.

''நீண்ட பொழுது கழிந்துவிட்டதே! புறப்படுவோமா?'' என்று மாதவி கேட்டாள். உடனே எழுந்து அவளுடன் செல்லாமல் தனது ஏவலாட்கள் பின் தொடரத் தனியே பிரிந்து சென்று விட்டான் கோவலன்.


## 26. மாதவி தனியே திரும்புதல்.



கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள்புக்கு
காதலனுடன் அன்றியே மாதவிதன் மனைபுக்காள்.

கோவலன் தனியே பிரிந்து சென்றதால் மாதவியின் நெஞ்சம் கவலை கொண்டது. அவள் செயலற்ற நிலை அடைந்தாள். தான் வந்த வண்டியினுட் சென்று அமர்ந்தாள். காதலன் கோவலன் இல்லாமல் தனியாகச் சென்று தனது மனையை அடைந்தாள்.


# 27. மாதவி வாட்டம்.



ஒருமுகம் அன்றி உலகு தொழுதிறைஞ்சும்
திருமுகம் போக்குஞ் செவ்வியள் ஆகி.

இளவேனில் வந்ததும் மாதவி பிரிவுத்துயரினுல் வருநதினுள். யாழினை வாங்கி இன்ப கீதம் இசைக்கத் தொடங்கினுள். அது சோக கீதமாகவே மலர்ந்தது. கோவலன் பிரிவை நினைத்து வருந்து கிருள். அவனுக்கு மடல் எழுத நினைக்கிருள். உலகத்தின் எல்லாத் திசைகளிலும் ஆட்சி செலுத்தும் மன்மதனைத் தொழுது, பித்திகை முகையை எழுத்தாணியாகக் கொண்டு, செம் பஞ்சுக் குழம்பிலே தோய்த்துத் தோய்த்துத் தாழை மடலில் திருமுகம் எழுதினுள். எழுதிய திரு முகத்தை வசந்த மாலையிடம் கொடுத்துக் ''கோவல னிடம் சேர்ப்பித்து அவரை அழைத்து வா'' என்று கூறினுள்.

# 28. மடல் கொண்ட கோவலன் மறுமொழி.




ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
பாடு பெற்றன அப்பைந்தொடி தனக்கு என்.

மாதவி கொடுத்த திருமுகத்தை வாங்கிய வசந்த மாலே புகாரின் கூலக்கடைத் தெருவிலே கோவலனைக் கண்டு, அவனிடம் அதனைத் தந்தாள்.

கோவலன், அவளிடம்

''பெண்ணே! மாதவி ஓர் ஆடல் மகள்! அவள் என்னிடம் காதல் மிகுந்தவள்போல் நடித்த தெல்லாம் நாடகம் என்பதை அறிவேன்! அவளுடைய தகுதிக்கு இந்த நாடகம் பொருத்தம் உடையதுதான்'' என்று சொல்லியதுடன், செல்ல மறுத்துவிட்டான்.


# 29. கண்ணகி, தேவந்தி.



ஆடுதும் என்ற அணிஇழைக்கு அவ் ஆயிழையாள்
பீடு அன்று என இருந்த பின்னர்.

கண்ணகி, தான் கண்ட கனவு பற்றித் தன் தோழி தேவந்தியிடம் சொல்லிக் கொண்டிருக்கிருள். அவளது தனிமை நிலையை உணர்ந்த தேவந்தி கண்ணகிக்குச் சில அறிவுரை கூறுகிருள். ''புகார் நகருக்குச் சற்றுப் பக்கத்திலுள்ள சோம குண்டம், சூரிய குண்டம் என்ற பொய்கைகளில் மூழ்கிக் கரையிலிருக்கும் காமவேளின் கோயிலைத் தொழுதால் மகளிர் தம் கணவரைப் பிரியாது கூடி இன்புற்றிருப்பார்கள்! நாமும் அங்குச் சென்று நீராடுவோம்! வா'' என்று தேவந்தி கண்ணகியிடம் சொல்ல, ''அவ்வாறு தொழுவது எனக்குப் பெருமையுடைய செயலல்ல'' என்று கண்ணகி மறு மொழி கூறுகிருள்.

# 30. கண்ணகி மனையில் கோவலன்.




நலம் கேழ் முறுவல் நகைமுகம் காட்டி
''சிலம்புஉள கொண்ம்'' என

தேவந்தியும் கண்ணகியும் உரையாடிக் கொண்டிருக்கும் போதில் கோவலன் வருகிறான். கண்ணகியைச் சந்திக்கிறான். அவளது வாடிய மேனியைக் கண்டு உள்ளம் வருந்துகிறான்.

''வஞ்சக உள்ளம் கொண்ட மாதவியுடன் வாழ்ந்து நமது குலத்தவர் தேடி வைத்திருந்த செல்வங்களை எல்லாம் சிதைத்து விட்டேன். அதனால் ஏற்பட்ட வறுமை நிலை எனக்கு வெட்கத்தைத் தருகிறது'' என்று சொல்லிப் புலம்புகிறான் கோவலன்.

அப்போது கண்ணகி, தன் முகத்திலே புன்சிரிப்பை வர வழைத்தபடி, ''என் காற்சிலம்புகள் உள்ளனவே! அவற்றை எடுத்துக் கொள்ளுக'' என்கிறாள். அவன் மாதவிக்குக் கொடுப்பதற்காகப் பொருள் வேண்டி வந்திருப்பதாக எண்ணி அவ்வாறு கூறுகிறாள்.

# 31. மதுரைப் பயணம்.




மாட மதுரையகத்துச் சென்று என்னோடிங்கு
ஏடலர் கோதாய் எழுக.

''சிலம்புகளை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கண்ணகி சொல்லியவுடன் கோவலன் சொல்கிறான்.

''கண்ணகி! இச்சிலம்பை விற்று அந்தப் பணத்தை வியாபாரத்திற்குரிய முதலீடாக்கி, நீ இழந்த நகைகளையும், நம்மைவிட்டுப் போய்விட்ட செல்வங்களையும் இனித் தேடத் துணிந்து விட்டேன். மாட மதுரை நகர் சென்று தேடுவேன். இதழ் விரிந்த மலர்க்கோதையே! நீயும் என்னுடன் இப் பொழுதே புறப்படு'' என்கிறான் கோவலன். இருவரும் இரவோடிரவாக வீட்டை விட்டுப் புறப் படுகிறார்கள்.


# 32. கவுந்தியடிகளுடன் பயணம்.



தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையேன் ஆதலின்
போதுவல் யானும் போதுமினி

வீட்டை விட்டுப் புறப்பட்ட கோவலனும் கண்ணகியும் நகர வாயிலை அடைந்தார்கள். நகரத்திலுள்ள பல ஆலயங்களையும் வணங்கினார்கள். அதன்பின் இலவந்திப் பள்ளியைக் கடந்தார்கள். கவுந்தியடிகள் என்னும் பௌத்தத்துறவி தங்கியிருந்த பள்ளிக்குச் சென்று, அடிகளை வணங்கினான் கோவலன். மதுரை மூதூர் சென்று வாணிபம் தொடங்கப் போவதாக அடிகளிடம் கூறினான் கோவலன். அது கேட்ட கவுந்தியடிகள், ''குற்றமின்றி விளங்கும் மதுரைக்கு நானும் போக எண்ணியுள்ளேன்! உங்களுடன் நானும் வருகிறேன்'' என்று சொல்லவும் கோவலன் மனமகிழ்வு பெற்றான்.

## 33. கோவலனைக் கௌசிகன் காணுதல்.



உட்புலம் புறுதலின் உருவம் திரியக்
கட்புல மயக்கத்துக் கௌசிகன் தெரியான்

நடந்து சென்று கொண்டிருந்த கோவலனுக்குத் தாகம் ஏற்பட்டது. தாகத்தைத் தணிக்க ஒரு நீர்நிலைக்குச் சென்றான்.

காட்டு வழியில் மனைவியுடன் நடந்து வந்த துன்பம் வருத்திட, ஊது உலைபோல் பெருமூச்செறிந்தான் கோவலன். கவலையினால் தாக்கப்பட்ட தனால் கோவலன் உருவம் மாறுபட்டுத் தெரிந்தது. அப்போது, மாதவியால் மடல் கொடுத்து அனுப்பப்பெற்ற கௌசிகன் என்பவன் அங்கு வந்தான். கோவலனை அடையாளம் காணமுடியாத கௌசிகன் ஒரு குறிப்பினால் மாதவியைப் பற்றிக் கூறினான். அந்தக் குறிப்புரையை உணர்ந்த கோவலன், அவன் அருகிற் சென்று சந்தித்து, மாதவியின் துன்பத்தையும் தன் பெற்றோர் படும் துன்பத்தையும் அறிந்து கொண்டான். மாதவியின் மடலைப் படித்து, அவள் குற்றமற்றவள் என்பதைத் தெரிந்து கொண்டான். அதே மடலைத் தன் பெற்றோரிடம் சேர்ப்பிக்கச் சொல்லி, கௌசிகனை வழியனுப்பி வைத்து, மதுரை நோக்கிப் புறப்பட்டான் கோவலன்.


# 34. பாணருடன் கோவலன்.



பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட்டு யாழில்
தந்திரி கரத்தொடு திவவுறுத்து யாஅத்து.

கோவலன் இசை விருப்பம் கொண்டவன். துன்பச் சூழ்நிலையினுல் அவனது இசை உணர்வு குறையவில்லை. பெற்ருேரைப் பிரிந்து, மாதவியைப் பிரிந்து, பொருள் தேட மதுரைக்கு நடந்து சென்று கொண்டிருக்கும் அந்தச் சூழ்நிலையிலே கூட அங்கு வந்த பாணர்களின் இசையைக் கேட்டு, அவர்களது ஆட்டத்தைப் பார்த்துத் தானும் கலந்து கொண டான். அவர்களிடமிருந்த செங்கோட்டு யாழை வாங்கி முறைப்படி மீட்டுப் பாடலைப் பண்ணேடு பாடி மகிழ்ச்சியடைந்தான்.

# 35. வையை ஆற்றில்.




புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி
தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி...

மதுரையைச் செழிக்க வைத்த வையை என்னும் நதி, புலவர்களால் புகழ்ந்துரைக்கப் பட்டவள். பொய்யாத பாண்டிய மன்னர்களின் குலக்கொடி அவள்.

அந்த வையையில் மரப்புணையின் துணைக் கொண்டு கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் பயணம் செய்து, சோலைகள் அடர்ந்த தென்கரைப் பகுதியினை அடைந்தார்கள்.

## 36. மாடலன் பழைய செய்தியை நினைவூட்டல்.



நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடலன் என்போன்.

மதுரை நகர்ச் சிறப்பைக் கண்டு புறஞ்சேரிக்குத் திரும்பிய கோவலன் தான் கண்டவற்றைக் கவுந்தியடிகளிடம் சொன்னான். அப்போது குமரித் துறையில் நீராடித்திரும்பிய மாடலன் என்னும் மறைவன் அங்குத் தற்செயலாக வருகிறான். கோவலன் அவனை வணங்குகிறான். கோவலனின் வாழ்வில் முன்பு நடைபெற்ற வீரச் செயல், கருணைச்செயல் போன்றவற்றை எல்லாம் மாடலன் நினைவூட்டினான்.


# 37. மாதரி மனையில் கண்ணகி, கோவலன்.



வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை கொள்கையின் புணர்ந்து-என்

''புறஞ்சேரிப் பகுதியை விட்டு விரைவில் மதுரையின் அகநகருக்குள் செல்லுங்கள்'' என்று கோவலன், கண்ணகி இருவரிடமும் கவுந்தியடிகள் சொல்லிக் கொண்டிருந்தபோது அங்கே, ஆயர் குலத்தைச் சேர்ந்த மாதரி என்னும் முதியவள் வந்தாள். கவுந்தியடிகளை வணங்கினாள். கண்ணகி, கோவலன் இருவரின் மரபுச் சிறப்புகளை எல்லாம் எடுத்துரைத்து அவ்விருவரையும் மாதரியிடத்தில் அடைக்கலமாகக் கொடுத்தார் கவுந்தியடிகள். மாதரியும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, கோட்டை வாயிலைக் கடந்து அவர்கள் இருவரையும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

# 38. கண்ணகி சமையலைக் கோவலன் சுவைத்தான்.



தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்து
அமுதம் உண்க அடிகள்

ஆயர்குலப் பெண்கள் கொடுத்துதவிய காய் கறிகளை வைத்து உணவு சமைத்தாள் கண்ணகி. அழகாகப் புனைந்திருந்த வேலைப்பாடமைந்த தடுக்கின் மேல் கோவலன் அமர்ந்திருந்தான். ஈனுத வாழையின் குருத்தினை உட்புறமாக விரித்துப் போட்டு, அதிலே உணவைப் படைத்து ''உணவு உண்ணுக'' என்று கோவலனை உபசரித்தாள். கோவலன் உண்ணத் தொடங்கினான்.

(இதுதான் அவன் சாப்பிடும் கடைசிச் சாப்பாடு என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது.)

# 39. பிரியா விடை.




சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்
மாறிவருவேன் மயங்கா தொழிக என

கோவலன், தான்செய்த நெறியற்ற செயல்களை எல்லாம் நினைத்துப் பார்த்துக் கண்ணகியிடம் எடுத்துச் சொல்லி வருந்தினன். கண்ணகியும் அதற்கு மறுமொழி தந்து, அவனது கவலையை மாற்ற முனைந்தாள்.

"கண்ணகி! உனது காற்சிலம்புகளில் ஒன்றைக் கொண்டு சென்று, கடைவீதியில் விற்றுப் பொருள் ஈட்டி வருகிறேன். இனியும் என்னைத் தவருக எண்ணி மயங்க வேண்டாம்" என்று கூறியபடி கோவலன், சிலம்பினை விற்கப் புறப்பட்டான்.


# 10. கோவலன் பொற்கொல்லன் சந்திப்பு.



தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்லன் இவன்எனப் பொருந்தி

மதுரைநகரின் கடைவீதியில் வந்துகொண்டிருந்தான், கோவலன். அப்போது திறமை மிக்க, நூற்றுக்கணக்கான பொற்கொல்லர் பின்னால் வர, அவர்களுக்குத் தலைவன்போல் ஒரு பொற்கொல்லன் வந்துகொண்டிருந்தான். அரண்மனைப் பொற்கொல்லர் என்ற சிறப்புப் பெற்றவர்களில் அவன் சிறந்தவனாக இருக்கலாம் என்று கோவலன் எண்ணினான். அவனை அணுகி, ''மன்னரின் மனைவிக்கு ஏற்ற சிலம்பு கொண்டு வந்திருக்கிறேன். அதனை விற்றுத் தர இயலுமோ'' எனக் கோவலன் வினவினான்.

# 41. கொலைக்களப்படுதல்.



காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன்...

மனைவியின் காற்சிலம்பை விலை கூறவந்த கோவலன் பிறரின் சூழ்ச்சியினால் பழிக்கு ஆளாக்கப்பட்டான். பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் கவர்ந்த திருடன் என்று குற்றம் சாட்டப் பெற்றான். மன்னனும் ஆய்ந்து பார்க்காமல், ''கோவலனைக் கொன்று, சிலம்பைக் கொண்டு வருக'' என்று ஆணையிட்டுவிட்டான். காவலாள் ஒருவன் வாளினால் வீச, இரத்தம் அருவியாய்க் குதித்து வந்தது. பாண்டிய மன்னனின் செங்கோல் வளையும் வகையில் கோவலன் வெட்டப்பட்டு வீழ்ந்தான்.

# 42. கண்ணகி வழக்குரைத்தல்.



கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே

தன் கணவன் கொலையுண்ட சேதியை அறிந்த கண்ணகி பொங்கி எழுந்தாள், விழுந்தாள், அழுதாள், மயங்கினாள். எழுந்தாள், கொதித்துச் சென்றாள்; பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தனது வழக்கை உரைத்தாள். தனது நாட்டுப் பெருமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லித், தன் கணவன் குற்றமற்றவன் என்பதையும், பாண்டியன் ஆராயாது பிழைசெய்தான் என்பதையும் சுட்டிக் காட்டினாள். தனது காற்சிலம்பில் உள்ள பரல்கள் மாணிக்கங்கள் என்று கண்ணகி சொல்ல, தமது சிலம்பின் பரல்கள் முத்துக்கள் என்று பாண்டியன் சொல்ல, கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பினை உடைத்துப் பார்க்க, அந்தச் சிலம்பிலிருந்து மாணிக்கப் பரல்கள் தெறித்து வீழ்ந்தன. ஒரு பரல் மன்னனின் வாயருகே தெறித்து வீழ்ந்தது.

பாண்டிய மன்னன் தான் பிழை செய்ததை உணர்ந்தான். அந்தக் கணமே அவனது ஆவி பிரிந்தது. அவனது தேவியும் அவனைப் பின் தொடர்ந்து உயிர் நீத்தாள்.

## 43. பேரியாற்றங்கரையில் செங்குட்டுவன் முன் மலை வாழ்வோர்.




எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்நாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்.

சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளுடனும் ஆயமகளிருடனும் மலைவளம் காண்பதற்காகத் தனது தலைநகரை விட்டுப் புறப்பட்டுச் சென்றான். பேரியாற்றின் கரையில் ஒரு மணல் மேட்டினில் அனைவரும் வந்து அமர்ந்திருந்தார்கள். மலைவாழ் குறவர் மக்கள் பரிசுப் பொருட்களுடன் வந்து சேரமன்னனைக் கண்டார்கள். அத்துடன் ஒரு வியப்புச் செய்தியையும் மன்னனிடத்திலே அவர்கள் சொன்னார்கள்:

''காட்டிலுள்ள வேங்கைமரத்தின் கீழே சில நாட்களுக்கு முன்பு ஒரு பெண்ணைக் கண்டோம். அவள் துயரப்பட்டவள் போலக் காணப்பட்டாள். அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவளோ? யாருடைய மகளோ? இதுவரை நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்காத காட்சி அது'' என்று கூறினார்கள்.

அப்போது அருகிலிருந்த சாத்தனார் ''அது கண்ணகியாகத்தான் இருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கண்ணகியின் வரலாற்றை எடுத்துச் சொன்னார்.

## 44. சேரன் வடபுலப் போர் அறிவிப்பு.



இறைஇகல் யானை எருத்தத்து ஏந்தி
அறைபறை எழுந்ததால் அணிநகர் மருங்கென்

கற்பரசி கண்ணகியின் வரலாற்றைக் கேட்ட சேரன் செங்குட்டுவன், அவளுக்கு ஓர் ஆலயம் அமைக்க எண்ணினான். அவளது படிவத்தைச் செய்வதற்கு இமயத்திலிருந்து கல் கொணர முடிவு செய்தான். வடபுலத்து மன்னர் கல் தராவிட்டால் அவர்களுடன் போரிட வேண்டும் என்றும் கூறினான். அப்போது, ''இந்தச் செய்தியை நமது வஞ்சியில் பறையறிவித்தால் போதும்; வஞ்சியில் உள்ள வேற்று நாட்டு ஒற்றர்களின் வாயிலாக அனைவருக்கும் செய்தி தெரிந்துவிடும்'' என்ற கருத்தை அழும்பில்வேள் என்னும் அமைச்சர் கூற, சேர மன்னன் ஒப்புக் கொண்டான்.

பட்டத்து யானையின் பிடரியில் பறையை ஏற்றிப் ''பேராற்றல் கொண்ட எமது சேரமன்னன் வடபுலம் நோக்கி வருகிறார். வடதிசை மன்னர்கள் திறைப்பொருளைக் கொண்டுவந்து அவரை எதிர் ஏற்றுக் கொள்ளுக'' என்று பறை அறிவித்தார்கள். அந்த ஒலி, வஞ்சி நகரின் எல்லாப் பகுதியிலும் ஒலித்தது.

## 15. கனக விசயர் தலையில் கண்ணகிக் கல்.




சினவேல் முன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்முடி ஏற்றி.

செங்குட்டுவனின் எதிரிலே போர்புரிய முடியாமல் கனக, விசய மன்னர்களும், அவர்தம் படையினரும் மிரண்டு ஓடினார்கள். அவர்களை எல்லாம் சேரன் படை வளைத்துப் பிடித்தது.

சேரமன்னன், கற்புக்கரசி கண்ணகியின் உருவெழுதுவதற்குரிய கல்லினைப் பொன்மயமான இமயத்திலிருந்து தோண்டிக் கொண்டான்; போர்க்களத்தில் தோற்றுப் போய் ஓடி ஒளிந்து பின்பு பிடிபட்ட கனக, விசய மன்னர்கள் தங்கள் தலைகளின் மீது இமயக் கல்லைச் சுமந்துவரச் செய்தான்.

## 46. கங்கையின் தென்கரையில் செங்குட்டுவன்.




தெள்ளுநீர்க் கங்கைத் தென்கரை ஆங்கண்
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு.

கண்ணகி படிவத்திற்குரிய புனிதக் கல்லைக் கங்கையில் நீர்ப்படை செய்யும் முறைப்படி செங்குட்டுவன் நீராட்டினன். அதன் பின்னர், நூற்றுவர் கன்னர் என்னும் வடபுல மன்னர்களால் அழகுற அமைக்கப் பெற்றிருந்த பாடிவீட்டில் செங்குட்டுவன் தங்கியிருந்தான்.

போர்க்களத்தில் ஈடுபட்ட தனது வீரர்களுக்குப் பொன்னாற் செய்த வாகை மலர்களைப் பரிசு தந்தான் சேரன் செங்குட்டுவன்.

# 47. மாடலன் சேரனிடம் நடந்தவை கூறல்.




ஆடுகொள் மார்பொடு அரசுவிளங்கு இருக்கையின்
மாடல மறையோன் வந்து தோன்றி

பாடிவீட்டில் சேரமன்னன் அமர்ந்திருந்தபோது அங்கு மாடலன் வந்து சேர்ந்தான் சேர மன்னனை வாழ்த்திய மாடலன், ''மாதவியின் கானல்வரிப் பாடல், கனக விசயர்களது முடியணிந்த தலைகளை நெரித்துவிட்டது'' என்று குறிப்பிட்டான். உடனே சேரன் ''உனது சொற்களின் பொருள் விளங்க வில்லையே! விளங்குமாறு கூறுக'' என்று சொல்ல மாடலன் முழு வர லாற்றையும் கூறத் தொடங்கினான். சாத்தனார் சொல்லிய செய்திகள் மதுரைச் செய்தியாகவும் குறவர்கள் சொல்லியது வஞ்சிச் செய்தியாகவும் இருக்க, மாடலன் சொல்லியதுதான் புகார்ச் செய்தியாக இருந்தது.

மாடலனின் வாயிலாகக் கோவலன், மாதவி கானல் வரிப்பாட்டையும், கோவலன் இறந்தபின் மாதவி துறவியான செய்தியையும் சேரமன்னன் தெரிந்து கொண்டான்.


# 48. சேரமன்னன் வஞ்சியில் புகுதல்.



குஞ்சர ஒழுகையிற் கோநகர் எதிர்கொள
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட்டுவன்—என்

சேரன் செங்குட்டுவன் தனது வடபுலப் பயணத்தை முடித்து வெற்றி வீரனுகப்பட்டத்து யானையின் மீது அழகுடன் அமர்ந்து வந்து கொண்டிருந்தான். தலைநகரத்து மக்கள் எல்லாம் தங்கள் மன்னரைக் காண்பதற்கு அணிதிரண்டு, எதிர்கொண்டு நின்று வரவேற்றுப் போற்றினுர்கள். சேரன் வெற்றிச் சிரிப்புடன் வஞ்சி நகரினுள் சென்ருன்.

# 49. செங்குட்டுவன் எடுத்த கண்ணகி கோயில்.



அருஞ்சிறை நீங்கிய் ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
''எந்நாட்டு ஆங்கண் இமய வரம்பனின்
நன்னாள் செய்த நாளணி வேள்வியில்
வந்தீக'' என்றே வணங்கினர்.

பத்தினிக்குக் கோவில் உருவாகிவிட்டது. விழாவும் அலங்காரமும் நடைபெறட்டும் என்று சேரமன்னன் ஆணையிட்டபின் பத்தினிக்குக் கோட்டம் அமைத்த அந்த விழாவில், சிறையிலிருந்து வெளிவந்த ஆரிய மன்னர்கள், விடுதலைபெற்ற வேறு வேந்தர்கள், குடக நாட்டுக் கொங்கர், மாளுவ நாட்டு மன்னன் அனைவரும் வருகை புரிந்ததுடன் ''எங்கள் நாட்டில் இமய வரம்பனின் பிறந்த நாளினைக் குறித்துச் செய்யும் வேள்வியில் வந்து தோன்றி எங்களுக்கு அருள் புரிய வேண்டும்'' என்று வணங்கிக் கண்ணகியை வேண்டி நின்றனர்.

## பூம்புகார் செல்லும் பயணிகளுக்குச் சில தகவல்கள்

பூம்புகார் தஞ்சை மாவட்டத்தில், சீர்காழி வட்டத்தில் உள்ளது. பூம்புகாருக்குப் புகைவண்டி வாயிலாகச் செல்கின்ற பயணிகள் மாயூரம் புகை வண்டி நிலயத்தில் இறங்கவேண்டும். சென்னையிலிருந்து செல்கின்ற பயணிகள் சீர்காழி புகைவண்டி நிலயத்திலும் இறங்கலாம்; மாயூரம் புகைவண்டி நிலயத்திலும் இறங்கலாம். சீர்காழியி லிருந்தும், மாயூரத்திலிருந்தும் உந்துகள் (Buses) மூலம் பூம்புகாரை அடையலாம்.

பூம்புகார், சீர்காழியிலிருந்து 21 கி. மீட்டர் தொலைவிலும், மாயூரத்திலிருந்து 29 கி. மீட்டர் தொலைவிலும் உள்ளது.

சென்னை நகரிலிருந்து சொந்த வாகனங்களில் செல்ல விரும்புபவர்கள், திண்டிவனம், பாண்டிச்சேரி, கடலூர், சிதம்பரம், சீர்காழி, ஆகிய ஊர்களின் வழியாகச் சென்று பூம்புகாரை அடை யலாம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல் வேலி முதலிய மாவட்டங்களிலிருந்து கார்களின் மூலம் பயணம் செய்பவர்கள், மேலூர், திருப்புத்தூர், காரைக்குடி, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, நாகைப்பட்டினம், காரைக்கால், தரங்கம்பாடி, ஆக்கூர் வழியாகவும் அடையலாம். மேலூர், புதுக்கோட்டை, தஞ்சை, மாயூரம் வழியாகவும் பூம்புகாரை அடையலாம்.

### புகைவண்டிப் பாதையின் தொலைவு

| | | | |
|---|---|---|---|
| சென்னை—சீர்காழி | ... | 261 | கி.மீட்டர் |
| சென்னை—மாயூரம் | ... | 281 | ,, |
| தஞ்சை—மாயூரம் | ... | 70 | ,, |
| திருச்சி—மாயூரம் | ... | 120 | ,, |